Press Release No: 858

Date: 14/10/08

# கோ-ஆப்டெக்ஸ் நடமாடும் விற்பனை நிலையம்

14.10.2008 அன்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன் அவர்கள் கோ-ஆப்டெக்ஸ் நடமாடும் விற்பனை நிலையத்தை துவக்கி வைத்தார்கள்.

கோ-ஆப்டெக்ஸின் தரமான எழில் மிகு கைத்தறித் துணிகள் மற்றும் ஆடைகள், அனைத்து தரப்பினரையும் சென்றடைய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இல்லாத பகுதியில் வாழ் வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்ய இந்த நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் செயல்படும்.

ஒரு விற்பனை நிலையத்தில் உள்ள அனைத்து விதமான துணிகளும், சேலைகளும், ஆயத்த ஆடைகளும் இந்த நடமாடும் விற்பனை நிலையத்தில் இடம் பெறும். முதல் கட்டமாக சென்னை நகரில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள் அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மென் பொருள் பூங்காக்கள், குடியிருப்புகள், கண்காட்சிகள், அரசு பொருட்காட்சிகள் ஆகிய இடங்களுக்கு சென்று விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை நகரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இல்லாத பகுதியில் உள்ள வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் விற்பனை செய்ய தயாராக உள்ளது. இதன் மூலம் இழந்த வாடிக்கையாளர்களை மீண்டும் அடையவும் அவர்களுக்கு சேவை செய்யவும் ஒரு வாய்ப்பாக அமையும்.

அனைத்துப் பொருட்களுமே வாடிக்கையாளர்களை சென்றடையும் தத்துவம் பெரிதாகப் போற்றப்படும் இந்நாளில் கோ-ஆப்டெக்ஸ் அந்த தத்துவத்தை பயன்படுத்தி தங்களது விற்பனையைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் ஒரு விளம்பரமாகவும் பயன்படுகிறது. கைத்தறியின் பெருமையைப் பறைசாற்ற இந்த நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் ஒரு முக்கியமான ஊடகமாக இருக்கிறது.

ஒரு செய்தித்தாளிலோ, வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ ஒரு புடவையை, ஒரு சட்டையைப் பார்ப்பத்தைவிட அனைத்து இரகங்களையும் நேரிடையாக பார்பது என்பது உண்மையான விளம்பரம் நேரிடையாக மக்களை அடைவதில் வாய்ப்பு இருபக்கமும்.

ஒரு இடத்திற்கு சென்றுவருவது என்பது, கடைகளுக்கு சென்று கூட்ட நெரிசலில் பொருட்களை பார்த்து வாங்குவது என்பது இந்நாளில் யாவரும் விரும்பாத ஒன்று. எனவே வாடிக்கையாளரின் நாடியைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு சேவை செய்யும் மனப்பாங்குடன் செயல்படும் இந்த நடமாடும் கோ-ஆப்டெக்ஸால் ஏழை நெசவாளரும் பயன்பெறுவர் என்பது உறுதி. எனவே வாடிக்கையாளர், கோ-ஆப்டெக்ஸ் (விற்பனையாளர்) நெசவாளர் (உற்பத்தியாளர்) ஆகிய மூவரும் பயன்பெறும் வண்ணம் இந்த நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் இயங்கும்.

14.10.2008 அன்று வாளவில் விற்பனை நிலையத்தில் ஆடவர் ஆடை சிறப்புக் கைத்தறிக் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழாவின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களால் நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் துவக்கி வைக்கப்பட்டது.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.